**கவனிக்க.-** *2023.04.28 ஆந் திகதிய 2330 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2331 - 2023 මැයි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.05.04

*2331 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | 172 |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 172 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


171 - B 082451 - 353 (2023/05)

# காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறவித்தல்கள்

### *1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் 14, 19, 22 (1) ஊ, 22 (1) அ ஆம் பிரிவின் பிரகாரம் சட்டரீதியான கடப்பாடாக காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருத்தல்.*

அடிக்கடி திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகராம் இந்த ஆணைக்ககுழுவுக்கு நியதிச்சட்ட கூற்றுக்களை சமர்ப்பித்து அச்சட்டத்தின் 14, 19, 22 (1) ஊ, 22 (1) அ ஆம் பிரிவின் பிரகாரம் சட்டரீதியான கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கும் வகையில் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அக்காலத்தில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற போதும் தற்பொழுது வரை காணிகள் கிடைக்கப் பெறாதவர்கள் அல்லது அவர்களுடைய உரிமையாளர்கள் தமது உரித்து அல்லது உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கீழ் உள்ள முகவரியில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் காணி உச்ச வரம்புப் பிரிவின் பணிப்பாளரிடம் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வருகை தருமாறு அறிவித்துக் கொள்கின்றேன். மேலும் மேற்குறிப்பிட்ட திகதியின் பின்னர் சட்டரீதியான கடப்பாடாக காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பித்துள்ள கோரிக்கைகள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதை மேலும் அறிவிக்கின்றேன்.

தலைவர்,
சட்டத்தரணி நிலந்த விஜேசிங்க,
காணி சீர்திருத்த ஆணைக்குழு.

இல. 475ஈ,
கடுவல வீதி,
பத்தரமுல்ல,
2023.04.25

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/72288.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: -NWP/PLC/L10/KL/LTL/47.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 613A பள்ளியவத்த கிராம அலுவலர் பிரிவின் பள்ளியவத்த கிராமத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட KLP/LAND/2022/28 திட்டத்தின் பிரகாரம், அளவில் களப்பிலிருந்து 20 ஏக்கர் நிலப் பகுதி கடலட்டை வளர்ப்புக் கருத்திட்டமொன்றிற்கென, இன்டிகோ அக்வா இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம் குத்தகைக்குப் பெறுவதற்கு வேண்டியிருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

காணியின் எல்லைகள்
வடக்கு : களப்பு;
கிழக்கு : களப்பு;
தெற்கு : களப்பு;
மேற்கு : களப்பு.

கோரப்பட்டுள்ள காணியைத் தேவையான விடயத்திற்கு குத்தகைக்கு வழங்க முடியும், இதனால், அரசின் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படுத்தி காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் கால பகுதி** .-முப்பது (30) வருடங்கள் (2023.03.31 இலிருந்து முன்நோக்கி முப்பது வருடங்கள்).

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம் (8)** .- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விடக் குறையும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் பிரகாரம் அவ் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகக் காணப்படும். 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனைத் (ரூபா. 5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் பிரகாரம் அவ் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4%ஆகக் காணப்படும். இக் குத்தகை பணத் தொகை ஒவ்வொரு 05 வருடத்துக்கொரு முறையும் திருத்தத்துக்கு உள்ளாக்க வேண்டியிருப்பதுடன், அது முன்னைய 05 வருடங்களின் இறுதியிலும் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை பணத் தொகைக்கு 20% ஐக் கூட்ட வேண்டும்.

***தவணை பணத்தொகை.***- தவணை பணத் தொகை அறவிடப்படுவதில்லை.

(இ) இக் காணியை வணிக நடவடிக்கைகளைத் தவிர பிற செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தாதிருத்தல் வேண்டும்;

(ஈ) இக் குத்தகை ஆரம்பமாகி ஒரு வருட காலப் பகுதியினுள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரினது மனதைக் கவரக் கூடிய வகையில் அதனை விருத்தி செய்ய வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை உட்பட்டிருக்க வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை மிகச் சிறந்த விருத்தி நிலையில் பராமரித்தல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது, குத்தகையாளரினால் காணி பெறப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளும் செயற்பாட்டைக் குறித்த காலப் பகுதியில் அடைந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுமிடத்து, குத்தகையை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.03.31 இலிருந்து 05 வருடங்கள் வரை உப குத்தகைக்கு விடுப்பதற்கு அல்லது கையளிப்பதற்கு அனுமதி வழங்கப்படாது;

(ஐ) குத்தகை, வாடகையை தொடர்ச்சியாகச் செலுத்த வேண்டியிருப்பதுடன், குத்தகை செலுத்தப்படுவதை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் தானாக இரத்து செய்யப்படும்;

(ஒ) குத்தகை வாடகை தொடர்ச்சியாக செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைக்கு 10% ஆன தண்டப் பண வட்டி அறவிடப்படும்;

இங்கு கீழே குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து 06 வார காலப் பகுதியினுள் தொடர்புடைய காணியை குத்தகைக்கு விடாதிருக்க வேண்டுமென ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்களை எழுத்து மூலமாக எனக்கு முன் வைக்கத் தவறுமிடத்து கோரிக்கையின் பிரகாரம் குத்தகை வழங்கப்படும்.

டப். ஆர். ஏ. ரீ. ஷகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2023, ஏப்பிறல் 26.

05 -42

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/74471.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: – UPLC/L/26/KG/224.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மொணராகலை மாவட்டத்தின் கதிர்காம பிரதேச செயலாளர் பிரிவிற்குற்பட்ட 146 பி. தெடகமுவ கிராம அலுவலர் பிரிவின், போதிராஜபுர கிராமத்தில் உள்ள நில அளவையாளர் திரு. கே. டப். எஸ். கே. விக்னராசா அவர்களினால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட 2011/257A ஆம் இலக்க உபநிரலின் துண்டுகள் இலக்கம் A மூலம் காட்டப்படும் அளவின் 01 ஏக்கர் 02 ரூட் 8.5 பர்ச்சஸ் அளவிலான அரசாங்கத்திற்கு சொந்தமான காணித் துண்டில் வணிக நடவடிக்கைகளுக்கு அனுசரனை வழங்கல் அடிப்படையில் திரு. கடபொடி கன்கானம்லாகே பண்டுல பிரியங்க அவர்களினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

வடக்கு : அஜித் பீரிஸ்சின் காணி;
கிழக்கு : யசபால ஜயசூரியவின் காணி;
தெற்கு : வீதி காப்பு பகுதி;
மேற்கு : பந்துலவின் காணி.

கோரப்பட்டுள்ள காணி தேவைப்படும் காரணத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும் ஆதலால் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைய காணியினை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் திட்டமிடுள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது வருடங்கள் (30) (கௌரவ அமைச்சரினால் குத்தகை அனுமதி வழங்கிய 2023.02.10ம் திகதி முதல்.

**வருடாந்த குத்தகை பணம்**.- 2023 ஆம் ஆண்டு காணி மதிப்பீட்டு பெறுமதி ரூ. ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) பார்க்கிலும் குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கமைய அவ் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டு காணி மதிப்பீட்டு பெறுமதி ரூ. ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகரிக்கும் சந்தரபங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகை தொகை அனைத்து 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் முன்னைய 05 வருட இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

**தவணைப் பணம்**.- பருவ பணம் அறவிடப்படாது.

(ஆ) குத்தகைக்கு எடுப்பவர்களினால் குத்தகை ஆரம்பித்த திகதி முதல் 01 வருட காலத்தினுள் பிரதேச செயலாளரின்

மனம்கவரும் வகையில் இக் காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(இ) குத்தகை எடுப்பவரினால் இக் காணி வணிக நடவடிக்கைகளுக்கு தவிர வேறு எந்த காரணங்களுக்காகவும் உடயோகிக்க முடியாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விடுக்கப்பட்ட விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை அமைய வேண்டும் ;

(உ) நிர்மாணித்த/ நிர்மாணிக்கப்பட்ட கட்டிங்களை நன்றாக அபிவிருத்தி நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட காலத்தில் குத்தகையாளரினால் காணியினை பெற்றுக்கொண்ட காரணத்தினை அடையும் கால எல்லைக்குள் அடைய முடியாவிடின் குத்தகையினை முடிக்க நேரிடும்;

(எ) 2023.02.10 ஆம் திகதி முதல் 05 வருடங்கள் முடியும் வரை இடை குத்தகைகள் வழங்க அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகை, வாடகை இடைவிடாது செலுத்த வேண்டியதுடன் குத்தகை வாடகை வழங்க தவரிய சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் உடனடியாக இரத்துச் செய்யப்படும்;

இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 06 வாரங்களுக்குள் குறித்த காணியினை குத்தகைக்கு வழங்க கூடாது என்பதற்கு காரணங்கள் எழுதி எனக்கு முன்வைக்காவிடின் இவ் விண்ணப்பத்திற்கமைய குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரி. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தில்,
ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல,
இல. 1200/6,
காணி பொது செயலாளர் அலுவலகம்,
"மிஹிகத மெதுர",
2023.04.20.

05 - 80

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/70797.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: - என்சிபி/பிஎல்சி/
எல்02/மனுப/04/01.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

அநுராதபுர மாவட்டம் மத்திய நுவரகம்பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 283, மஹவுலங்குலம கிராம அலுவலர் பிரிவில் மஹவுலங்குலம கிராமத்தில் வரைபட இலக்கம் 3700 இல் காணித்துண்டு இலக்கங்கள் 01 மற்றும் 02 இன் 1.8716 ஹெக்டயர் (ஏக்கர் 04 றூட் 02 பேர்ச்சஸ் 20) விஸ்தீரனமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்க தறுமாறு கேட்டுத் திரு. கோனபீனுவல விதானகே சஞ்ஜய என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எச். எம். ஜீ. வி. பண்டார என்பவரின் காணி, எஸ். தேவானி என்பவரின் காணி மற்றும் முத்து மெனிக்கா என்பவரின் காணி;
கிழக்கு : முத்து மெனிக்கா என்பவரின் காணி, ஐ. கே. பண்டார என்பவரின் காணி, உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் டி. எம். எல். திஸாநாயக்க என்பவரின் காணி;
தெற்கு : ஜீ. பிரியரத்ன என்பவரின் காணி, டி. எம். எல். திஸாநாயக்க என்பவரின் காணி;
மேற்கு : எச். எம். ஜீ. வி பண்டார என்பவரின் காணி மற்றும் புஞ்சி பண்டா என்பவரின் காணி.

குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2023.03.31 தொடக்கம் 30 வருடங்கள் முன்நோக்கி).

(ஆ) **வருடாந்த குத்தகை**.- 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்குமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியாக ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்காக பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

**தவணைப்பணம்**.- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.31 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இல. 1200/6,
"மிஹிகத மெதுர",
காணிச் யெலகம்,
ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல,
2023 ஏப்பிறல் 26 .

05 - 81

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வியாழன் | 04.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2023 |
| | | வெள்ளி | 12.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2023 |
| | | வெள்ளி | 19.05.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.05.2023 |
| | | வெள்ளி | 26.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2023 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2023 |
| | | வெள்ளி | 09.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2023 |
| | | வெள்ளி | 16.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2023 |
| | | வெள்ளி | 23.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2023 |
| | | வெள்ளி | 30.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2023 |
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2023 |
| | | வெள்ளி | 14.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2023 |
| | | வெள்ளி | 21.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2023 |
| | | வெள்ளி | 28.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.